DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**STC.No.135/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | வசந்தி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சேவுகப்பெருமாள் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.02.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் நாரணமங்களத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 21.09.2024ம் தேதி மாலை 5 மணிக்கு கண்ணங்குடி தர்மன் டீ கடைக்கு பக்கத்தில் நான் கடையில் ஜாமான் வாங்கிக் கொண்டிந்தபோது சண்டை நடந்து முடிந்துவிட்டது. நான் வந்து பார்த்தபோது அ.சா.1 தலையில் ரத்தத்துடன் இருந்தார். பின்பு அ.சா.1ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். அங்கிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். சிவகங்கை அரசு மருத்துவமனையில் போலீசார் என் தந்தையிடம் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள

அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**மேற்படி அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் நடந்த அன்று இரவு 9 மணிக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு போலீசார் விசாரிக்க வந்தார்கள், அப்போது என் தந்தை மயக்கமாக இருந்ததால் மறுநாள் வந்து விசாரித்தார்கள். என் தந்தை மயக்கமாக இருந்ததால் என்னிடம் விசாரித்தார்களா என்றால், ஆமாம் என்ன நடந்தது என்று கேட்டார்கள். நான் சம்பவம் நடக்கும்போது பக்கத்து கடையில் இருந்ததாக சொல்வது பொய் என்றும் சம்பவம் நடக்கும்போது நான் நாரணமங்களத்தில் இருந்தேன் என்றால் சரியல்ல, நான் சிசேரியன் செய்து 6 மாதம் என் தந்தை வீட்டில் இருந்தேன். நான் அ.சா.1 க்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம்.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.